<u>சுருக்கம்</u>

திட்டங்கள் – சுய உதவிக் குழுக்கள் – தமிழ்நாடு சுய உதவிக் குழு நலச் சங்கம் – சுனாமி திட்ட செயலாக்கப் பிரிவின் கட்டுப்பாட்டிலிருந்து தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ( மஅதி3 ) துறை

அரசாணை (நிலை) எண்.14

நாள்: 04.02.2010
திருவள்ளுவர் ஆண்டு 2041
தை: 22
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை ( நிலை ) எண்.139, ஊரக வளர்ச்சி (CSS-I) துறை, நாள் 21.10.2005.
2. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் எண். 71179/எஸ்ஜிஎஸ்ஒய் 3–1, நாள் 3.5.2006.
3. திட்ட செயலாக்க அலுவலர், சுனாமி திட்ட செயலாக்க அலகு, சென்னை கடிதம் எண். TNWS/90/2006, நாள் 16.6.2006.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் எண். 71179/2004/எஸ்ஜிஎஸ்ஒய் 3–1, நாள் 27.6.2007.
5. தலைவர், தமிழ்நாடு சுய உதவிக்குழு நலச் சங்கம், சுனாமி திட்ட செயலாக்க அலகு, சென்னை கடிதம் எண். TNWSSHGs/110/2007 நாள் 7.6.2007

*****

<u>ஆணை:-</u>

சுனாமி திட்ட செயலாக்க அலகின் திட்ட செயலாக்க அலுவலரை (தற்போது திட்ட இயக்குநர்) தமிழ்நாடு சுய உதவிக்குழு நலச் சங்கத்தின் தலைவராக ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2. தமிழ்நாடு சுய உதவிக் குழு நல சங்கத்தின் தலைவராக, சுனாமி திட்ட செயலாக்க திட்ட இயக்குநர் தொடர்ந்து செயல்படுவது குறித்து ஆய்வு செய்த அரசு, இச்சங்கத்தினை தொடர்வது குறித்தும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது குறித்தும் ஆய்வு செய்திட முடிவு எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்து கோரப்பட்டது.

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு அளித்த தமது அறிக்கையில் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

(த.பி.பா.)

(அ) சங்கத்தின் நோக்கம்

1. சுய உதவிக் குழுவின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு வளங்களைக் கண்டறிதல்.
2. சுய உதவிக் குழுக்களுக்கிடைய சந்தையை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளைக் கண்டறிவது.
3. பொருட்கள் உற்பத்தி செய்வதற்கும் அதை விற்பனை செய்வதற்கும் ஆலோசனை வழங்குதல்.
4. ஒத்த நிறுவனம் மற்றும் பல்வேறு முகவர்களுக்கிடையே சுய உதவிக் குழுக்களுக்கு தொடர்பை உண்டாக்குதல்.
5. கச்சாப்பொருள்களை கொள்முதல் செய்து வழங்குதல்.
6. உற்பத்திப் பொருள்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.
7. போக்குவரத்து வசதி, கச்சாப் பொருள்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களை சேமித்து வைக்க சேமிப்புக் கிடங்கு வசதியைச் செய்து தருதல்.
8. சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு விளம்பரங்கள் செய்வது.
9. கருத்துப்பட்டறை மற்றும் கருத்தரங்கங்கள் நடத்துதல்.
10. செயல்திறன் பயிற்சி மற்றும் பிற வகைப் பயிற்சிகள் மூலம் குழுக்களுக்கு தொழில்நுட்பவியல் அறிவை பயிற்றுவித்தல்.
11. சுய உதவிக் குழுக்களின் நலனுக்காக அவற்றின் நடவடிக்கைகளை கண்காணித்தல்.

(ஆ) சங்கத்தின் தற்காலிக விதிகளின் கீழ் சங்கத்தின் செயல்பாடுகள்:

1. விற்பனை தொடக்க முயற்சி
2.விழாக்கால காட்சிக் கடைகள் மற்றும் பொருட்காட்சிகளில் பங்கேற்பது.
3. இணையதளம் நடத்துவது.
4. மாநில பயிற்சி வகுப்பு நடத்துவது.
5. சராஸ் விழாக்கால காட்சி கடைகளில் பங்கேற்பது
6. பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்பு குறித்து விளம்பர படம் வெளியிடுதல்.
7. நிதி ஆதாரம் பேணுதல்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தமது அறிக்கையில் இச்சங்கம் தொடர வேண்டும் எனவும் கீழ்க்கண்ட காரணங்களினால், இச்சங்கத்தினை கலைக்க வேண்டாம் எனவும் கோரியுள்ளார்.

- மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து நன்றாக செயல்பட்டு வருகிறது.
- மாநில அளவிலான பொருட்காட்சிகளை, இச்சங்கம் நடத்தி வருகிறது.
- வள்ளுவர் கோட்டத்தில் நிறுவப்பட்டு வரும் விற்பனை வளாகத்தை நிர்வாகிக்க இச்சங்கம் அவசியமாகிறது.

(த.பி.பா.)

5. மேலும், இதனை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர் அல்லது தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றுவது குறித்து அரசு முடிவெடுக்கலாம் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர் பரிந்துரைத்துள்ளார்.

6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளரின் கருத்தினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில், தமிழ்நாடு சுய உதவிக் குழு நலச் சங்கத்தைக் கலைக்க வேண்டாம் எனவும், இச்சங்கத்தின் நோக்கங்களும் செயல்பாடுகளும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை ஒத்துள்ளதால், இதனை சுனாமி திட்ட செயலாக்கப்பிரிவின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.. மேலும், இச்சங்கத்தின் செயல்பாடுகள் தொடர்பாக பெறப்பட்டு கையிருப்பில் உள்ள செலவிடப்படாத நிதி அனைத்தும் நிறுவனத்தின் கணக்குகளுடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திட்ட இயக்குநர்,
சுனாமி திட்ட செயலாக்கப்பிரிவு,
சென்னை – 600 001.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை – 600 032.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர்,
சென்னை – 600 015.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
சிறப்புப் பணி அலுவலர் (பேரிடர் உதவி மற்றும் மறுவாழ்வு),
சென்னை– 600 005.
நகல்: மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
முதன்மைச் செயலாளரது தனிச் செயலர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை,
சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.